களும் ஒன்றுதான். (மேசையை தட்டும் ஒலி) நீங்கள் எத்தனை தடவை இது விஷயமாக லெட்டர்கள், போன்கள், டெலக்ஸ் மெசேஜ்கள் என்று இல்லாமல் நேரிடையாக போய் உட்கார்ந்து காரியத்தை சாதிக்க முயற்சி எடுத்திருக்கிறீர்கள்? அதுதான் உங்களுடைய குற்றம்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நானே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கடிதத்துடன் சென்று நேரிலேயே கொடுத்திருக்கிறேன். முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு திவாரியை சந்திக்கும் போதும் மாண்புமிகு பிரதமரைச் சந்திக்கும் போதும் எல்லா நேரங்களிலும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பார்க்கிற போதெல்லாம் சொல்லாமல் விட்டதே இல்லை. மாதத்திற்கு இரண்டு முறைகள் போய் நேரிடையாக முயற்சி செய்து விட்டு தான் வருகிறோம்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: அழுத பிள்ளை தான் பால் குடிக்கும். அழாத பிள்ளை பால் குடிக்காது. தயவு செய்து நீங்கள் துரிதமாக அங்கே போய் கிட்டேயிருந்து காரியத்தை முடியுங்கள்.

மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே நாங்கள் தொடர்ந்து அழுது கொண்டு தான் இருக்கிறோம். ஆனால் பால்தான் கிடைக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவலகள் இத்துடன் முடிவுற்று, 2-2-1983 காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.23 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது

8. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

127. 1976-77 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் கணக்குகளின் தணிக்கை அறிக்கை (ஆங்கிலம்) (தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு மாநில வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (அ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

128. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் 1977-78 மற்றும் 1978-79 ஆண்டுக்கான தணிக்கை அறிக்கை (ஆங்கிலம்) தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப்பகுதிகள் (மேம்பாடு—அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41ஆவது பிரிவு மற்றும் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு மாநில வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு 17/1961) 125 (2) (அ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏணைய தாள்கள் ஏதுமில்லை.

இணைப்பு.

(23 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 95-க்கான விடையைக் காண்க)

## இணைப்பு

| பணிப் பேருந்துகளின் தரங்கள் | ஒரு கிலோ மீட்டர் தூரமுள்ள தொலைவிற்கு வசூலிக்கப்படும் கட்டணம் (பைசாக்களில்.) | | | | |
|---|---|---|---|---|---|
| | தமிழ்நாடு | ஆந்திரம் | கர்நாடகம் | கேரளம் | பாண்டிச்சேரி |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. விரைவுப் பேருந்துகள் Experess Services— | | | | | |
| (அ) சாதாரண வண்டிகள் | | | | | |
| (i) சமவெளிகளில் .. | $7\frac{1}{2}$ | 10 | — | 9 | $6\frac{1}{2}$ |
| (ii) மலைச்சாலைகளில் .. | $9\frac{1}{2}$ | — | — | $11\frac{1}{4}$ | — |
| (ஆ) சொகுசு வண்டிகள் (Deluxe Coaches)— | | | | | |
| (i) சமவெளிகளில் .. | $9\frac{1}{2}$ | 12 | 12 | $13\frac{1}{2}$ | — |
| (ii) மலை சாலைகளில் .. | $11\frac{1}{2}$ | — | — | $16\frac{3}{4}$ | — |
| (இ) சீர்வெளிச்சாதனம் பொருத்தப்பட்ட வண்டிகள் (Air Conditioned Coaches)— | | | | | |
| (i) சமவெளிகளில் .. | $14\frac{1}{2}$ | — | — | — | — |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) மலைச்சாலைகளில் .. | $16\frac{1}{2}$ | — | — | — | — |
| 11. வெளியூர் பயணப் பேருந்துகள் (Monfussil Services)— | | | | | |
| (i) சமவெளிகளில் .. | $7\frac{1}{2}$ | 8 | 8 | 7 | 6 |
| (ii) மலைச்சாலைகளில் .. | $9\frac{1}{2}$ | — | $8\frac{1}{2}$ | $8\frac{3}{4}$ | — |
| 111 பெருநகர் மற்றும் நகரப் பேருந்துகள் (Mcopolition and TownServices)— | | | | | |
| (i) சமவெளிகளில்— | | | | | |
| (அ) முதல் நிலை 2 கிலோ மீட்டர்) .. | 30 | 30 | 30 | 40 | 20 |
| (ஆ) அடுத்துள்ள ஒவ்வொரு நிலைக்கும் .. | 10 | 10 | 15 | — | 10 |
| | (மூன்றாவது நிலைவரை, அடுத்துள்ள நிலைகளுக்கு 5 காசுகள் | (ஐந்தாவது நிலைவரை, அடுத்துள்ள நிலைகளுக்கு 5 காசுகள் | | | |
| (ii) மலைச்சாலைகளில் | | | | | |
| முதல் நிலைக்கு | 40 | — | — | 50 | — |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS